அசல்

வசு ஆனி௨௨ அருணாசலம்
2.6.1881

அசல் - நகல் - 1

௨

சிவமயம்

சுவாமியவர்கள் உபய சரணாரவிந்தங்க
ளுக்கு அடியேனருணாசலம் மநோவாக்கு
காயங்களினால் நினைத்துந் துதித்தும் வணங்கி
யும் வரையும் விண்ணப்பம் செய்யப்பெற சுவாமி
யவர்கள் கற்பித்தருளிய பணிவிடைகளிற்
குறைவின்றி நடாத்திவருகிறேன் இங்ஙனம்
அடியேன் சுவக்கியமே அங்ஙனம் சுவாமியவர்
களுடைய திருமேனியாரோக்கியமா ~~சு~~வை
ழுந்தருளியிருப்பதைப் பற்றித் தெரிய விரும்பு
ற்றிருக்கிறேனடியேனைத் தடுத்தாட் கொண்டருளிய
இன்னச் சந்நிதானத்தின் திருவருளால் சிவகாசியெ
ன்னு மித்தலத்துக் கொரு புராணம் பாடிமுடித்தேனப்
புராணத்தை யுபய சந்நிதானங்களுடைய திருக்கண்
சாத்தவுஞ் சுவாமியவர்கள் முதலானவர்களிடத்
தில் காண்பித்தும் பரிசுத்தம் பண்ணுதற்கின்னுஞ்
சின்னாளில் வருவேனதற்குளிவ்விடத்திலரங்கேற்றிப்
பொருட்பயன் பெறவேண்டியிருக்கிறதாதலாற்
சுவாமியவர்களுடைய சாற்றுக்கவிகள் வேண்டு
மென்று பேரவாவுற்றிருப்பதாற் கருணைவைத்
துக் கூடிய வரையில் மேற்படி கவிகளனுப்பியருளும்
படிக்குப் பிரார்த்திக்கிறேன். அடியேனிடத்திற்
சுவாமியவர்களந்தரங்க வாஞ்சையாக கருணை செலுத்த
வேண்டுமென்று திருவுளமிருத்தலாலாங்ஙனஞ்சுரு
க்கமாக விண்ணப்பஞ் செய்தேனிப் பொழுது திரு
வாவடுதுறையாதீனாசாரியாரைத் தரிசிக்கிறார்கள்ச
ந்நிதானந் தனிகைக் கெப்போ தெழுந்தருளுகிறது.
மதுரை ஆத்வானிராம சுவாமிப் பிள்ளையவர்கள்தே
வார முயற்சியெவ்வாறிருக்கிற திவைகளெல்லா

அசல்

மொருவாறு தெரியும்படி திருமுகங்கட்ட
ளையிட்டருளவும் பிரார்த்திக்கிறேன். சுவா
மியவர்களுடைய திருமுகத்தை யெதிர்பார்
த்திருக்கு மடியேன்.

சேற்றூர்.
அருணசலம்
விசு வரு. ஆனிமீ.
சிவகாசி.

மேல்விலாசம்.

சிவகாசியாற் சேற்றூர் அருணசல
க்கவிராயருக்கென்றெழுத வேண்டியது.

௸ புராணம் பாடும்படி சிவகாசியார் பெரும்
பிரபுவாகிய செண்பகக்குட்டி நாடான் சொ
ன்னதாற் பொருட் பயனு மிகவுபகரிப்பதா
லக்கருத்துஞ் சாற்றுக்கவியாருக்க வேண்
டுமென்று பிரார்த்திக்கிறேன்.

அசல்

சாற்றுக்கவி.

2-6-1881

சேற்றூர். அருணைசலக்கவி ராயர்.

விசு. வரு ஆனிமீ

2984

Copied in
த. க. VOL 'W'
p. 134-136

அப்படப்பட்டது.

36